DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, DHARMAPURI

Case No. **E.A. No.16 of 2020**
**in**
**E.P.No.42 of 2018**

Deposition of Witness: **P.W.1**

| | |
|---|---|
| Name | : திருமதி.பூங்கொடி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.04.2023.**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர். பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். என் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை (1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)**

நான் என்ன படித்திருக்கிறேன், என்ன வேலை செய்கிறேன் என்றால் M.Sc., M.A., M.Ed., படித்து முடித்துவிட்டு அரசு பள்ளியில் BT Assistant ஆக

வேலை செய்கிறேன். எனக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் 1992ம் ஆண்டு திருமணமானது. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள், அவர்களது பெயர் R.K.பேரிளம்வழுதி, K.P.மோகன்பாலாஜி. என் 2வது மகன் மோகன்பாலாஜி வழக்கறிஞராக இருக்கிறாரா என்றால் ஆமாம். அவர் வழக்கறிஞர் திரு.திருநாவுக்கரசு அவர்களிடம் ஜூனியராக இருக்கிறாரா என்றால் ஆமாம். எந்த ஆண்டு என் மகன் சட்டக்கல்வி படித்து முடித்தார் என்றால் 2 ஆண்டுகள் முன்பு முடித்தார். நானும் 2ம் மனுதாரரும் நல்ல உறவு முறையில் உள்ளோமா என்றால் ஆமாம். எங்களுக்கும் எங்கள் தந்தை மற்றும் சகோதரர்களுக்கும் இடையில் சுமூகமான உறவுமுறை உள்ளது என்றால் ஆமாம். 2010ம் ஆண்டு என் பெற்றோரும் சகோதரர்களும் (3 முதல் 7 எதிர்மனுதாரர்கள்) சேர்ந்து 8ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தை ஆரம்பித்தபோது அவர்கள் ஒரு ஆவணம் தயாரித்து வங்கியில் கடன் வாங்கினார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது, நிறுவனத்தை ஆரம்பித்தபோது அழைத்தார்கள், வந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு சென்றுவிட்டேன். அந்த நிகழ்ச்சிக்கு என் சகோதரரி 2ம் மனுதாரரும் வந்தாரா என்றால் வந்தார். 2ம் மனுதாரருக்கு எந்த ஆண்டு திருமணமானது என்றால் 1989ம் ஆண்டு திருமணம் நடந்தது. 8ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் வரவு செலவு கணக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனு சொத்துக்களில் இருந்து எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்பது பற்றி என் பெற்றோர் எங்களிடம் தெரிவித்தார்களா என்றால் தெரிவிப்பது கிடையாது. திருமணத்திற்கு பிறகு நானும் 2ம் மனுதாரரும் அவரவர் கணவர் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் ஆமாம். எங்கள் குடும்ப வரவு செலவு தனி என்றால் சரிதான், அதேபோல் எங்கள் பெற்றோர் மற்றும் சகோதரர்கள்

குடும்ப வரவு செலவு தனி என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் பாலசுப்ரமணியன் என்பவரும் என் சகோதரர் 5ம் எதிர்மனுதாரரான திருநாவுக்கரசும் சட்டக் கல்லூரியில் ஒன்றாக படித்தவர்கள் என்றால் ஆமாம். 8ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்காக என் பெற்றோரும் சகோதரர்களும் இந்தியன் வங்கியில் கடன் வாங்கியது எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் கடன் வாங்குவது பற்றி எங்களிடம் சொல்லமாட்டார்கள், நாங்களும் அதை தெரிந்து கொள்ள மாட்டோம். இந்தியன் வங்கியில் பெற்ற கடனை அடைப்பதற்காக 1ம் எதிர்மனுதாரரிடம் என் சகோதரர்களும் பெற்றோரும் கடன் வாங்கியது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த கடன் சம்மந்தமாக 2017ம் ஆண்டு 1ம் எதிர்மனுதாரர் கோவை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கை 1, 2 எதிர்மனுதாரர்களும் என் பெற்றோர் மற்றும் சகோதரர்களும் முடித்து கொண்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் தேதி தெரியாது, 2020ம் ஆண்டு வில்லங்க சான்று எடுத்து பார்த்தபோதுதான் எனக்கு தெரிய வந்தது. அந்த வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வக்கீல் திரு.முனியப்பன் அவர்களிடம் கொடுத்துள்ளேன். அந்த வில்லங்க சான்றை இந்த மனுவில் நான் தாக்கல் செய்யாததற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் அதனை என் முந்தைய வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டேன், அவர் பார்த்துக் கொள்வார் என்று நான் இருந்துவிட்டேன். மனு சொத்துக்கள் என் தந்தைக்கு 1968ம் ஆண்டு பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்கள் என்றால் ஆமாம். எனக்கும் 2ம் மனுதாரரான என் தங்கைக்கும் திருமணம் நடந்த பிறகு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் என் தந்தையிடம் சொத்தில் பாகப்பிரிவினை கேட்டதாக ஆவணம் எதுவும் இல்லை என்றால் என்

தந்தை அவரே சொத்துக்களில் பாகம் எங்களுக்கு கொடுத்துவிடுவார் என்ற நம்பிக்கையில் நாங்கள் பாகம் கேட்காமல் இருந்துவிட்டோம். வில்லங்க சான்று போட்டு எடுத்து பார்த்த பிறகாவது நாங்கள் எங்கள் தந்தையிடம் சொத்தில் பாகம் கேட்டோமா என்றால் இல்லை, காரணம் அவரே பாகம் கொடுத்துவிடுவார் என்று நினைத்தோம். தற்போது வரையிலும் நாங்கள் எங்கள் தந்தை பாகம் கொடுத்துவிடுவார் என்ற எண்ணத்தில்தான் உள்ளோமா என்றால் ஆமாம். மனு சொத்துக்கள் என் தந்தைக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மனு சொத்துக்களில் எனக்கும் என் தங்கைக்கும் பாகம் இல்லை என்பதால்தான் இதுவரை நாங்கள் பாகம் கேட்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் இந்த நிறைவேற்று மனுவில் உள்ள சொத்தில் எங்களுக்கு பாகம் உள்ளதாகவும் எங்களை நிறைவேற்று மனுவில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றும் நிறைவேற்று மனு நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்களிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தக் கூடாது என்ற எண்ணத்தில் நாங்கள் 3 முதல் 7 மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து கொண்டு இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மனு சொத்துக்களில் எங்களுக்கு உரிமை உள்ளது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் இந்த மனுக்கள் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(எதிர்மனுதாரர்கள் 3 முதல் 8 தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. அவர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில் இல்லை. அவர்கள் இந்த மனுக்களில் ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை. ஆகவே 3**

**முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை ஏதும்இல்லை என பதிவு செய்யப்படுகிறது).**

Sd/–A.Manimozhi,

Principal District Judge,

Dharmapuri.